**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**OS.No.29/2016 P.W.2**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | விநாயகம் |
| த/பெ. | முருகன் |
| வயது | 60 |
| வசிப்பிடம் | எண்.33, ஏரிக்கரை தெரு, உள்ளகரம் |
| தொழில் | தச்சு வேலை |

**முதல் விசாரணை 09.02.2026**

நான் இந்த வழக்கில் வா.சா.2. வாதியை எனக்கு தெரியும். பிரதிவாதியை எனக்கு தெரியும், அவர்கள் இருவரையும் நான் பார்த்துள்ளேன். எனக்கு சாட்சி சொல்ல நீதிமன்ற அழைப்பானை வந்தது. வா.சா.ஆ.11 ஒப்பந்தத்தில் வாதியும், பிரதிவாதியும் கையொப்பம் செய்துள்ளார்கள். மேற்படி ஒப்பந்தத்தில் நானும் சான்றொப்ப சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேன். அதில் இரண்டாவது சாட்சியாக இருப்பது என் கையொப்பம் தான். 15.12.2012 அன்று மேற்படி ஒப்பந்தம் ஏற்பட்டது. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் 60 x 40 அடி. மேற்படி ஒப்பந்தத்தில் கையொப்பம் செய்தபோது நான் மற்றும் வாதியின் மகன் சுகுமார் ஆகியோர் இருந்தோம். வாதியும், பிரதிவாதியும் ஒப்பந்தம் போடும்போது ரூபாய் ஒரு லட்சம் வாதி கொடுத்த பிறகு கிரய பத்திரம் பதிவு செய்து கொடுக்க வேண்டுமென்று பேசிக்கொண்டார்கள். ஒப்பந்தத்தில் 3 பக்கங்கள் இருந்தது.

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வாதி ஆதரம்பாக்கத்தை சேர்ந்தவர். வழக்கு சொத்தில ் வாதி வாடகைதாரராக இருந்தார். வாதிக்கும், பிரதிவாதிக்கும ் ஆலந்தூர ் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ள விவரம் எனக்கு தெரியாது. கிரய ஒப்பந்தத்தை வாதியின் வீட்டில் வைத்து எழுதினோம். அவ்வாறு மாலை 3.00 அல்லது 4.00 மணியிருக்கும். யார் எழுதினார்கள் என்று கேட்டால் எனக்கு தெரியாது,

கையொப்பம் போடும்போது தான் தெரியும். ஒப்பந்தத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் கையொப்பம் போடுவதற்கு முன்பு என்னிடம் படித்து காட்டினார்கள். கிரய தொகை ரூபாய் 35 லட்சம் காட்டப்பட்டிருந்தது. கிரய ஒப்பந்தம் எழுதும் போது ரூபாய் 34 லட்சம் கொடுக்கப்பட்டது. கிரய தொகை ரூபாய் 36 லட்சம் என்று கிரய ஒப்பந்தத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து ஆம் என்று கூறுகிறார். ரூபாய் 35 லட்சம் பெற்றுக் கொண்டதாக ஒப்பந்தத்தில் உள்ளது என்றால் சாட்சி ஆவணத்தை பார்த்து ஆம் என்று கூறுகிறார். கிரய ஒப்பந்தம் எழுதப்பட்ட அன்று எந்த பணமும் கொடுக்கவில்லை. கிரய ஒப்பந்த்தில் 3 மாதத்திற்குள் கிரயம் முடிக்க வேண்டுமென்று காட்டப்பட்டுள்ளது. கிரய ஒப்பந்தத்தில் 18.10.2010 அன்று ரூ.12,50,000/-மும்ம், 15.02.2011 அன்று ரூ.15,00,000/-மும கொடுத்ததாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரய ஒப்பந்தம் எழுதப்பட்ட காலத்தில் பிரதிவாதி அங்கு இல்லை என்றால் சரியல்ல. வாதியும், பிரதிவாதியும் இருந்தார்கள். கிரய ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் பிரதிவாதியினுடையதில்லை என்றும், கையெழுத்து நிபுணர் அறிக்கை கொடுத்துள்ளார் என்றால் பிரதிவாதி தான் கையொப்பம் செய்தார். நான், வாதி மற்றும் மற்றொரு சாட்சியும் சேர்ந்து கிரய ஒப்பந்தத்தை மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. கிரய ஒப்பந்தத்தில் இருப்பது பிரதிவாதியின் கையொப்பம் இல்லை என்றால் சரியல்ல. 3 மாதத்திற்குள் கிரயம் செய்தார்களா என்ற விவரத்தை நான் கேட்டபோது வாதி கிரயம் முடிந்து விட்டதாக சொன்னார். கிரய ஒப்பந்தத்தில் பின்னிட்டு என்னிடம் கையொப்பம் பெறப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் ஆதம்பாக்கத்தில் உள்ளது. தாவா சொத்தின் கதவு எண் தெரியாது.

<u>**மறு விசாரணை**</u>

இல்லை